**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110239

1. District : மாவட்டம் : கிருஷ்ணகிரி — PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு — Year ஆண்டு: 2023 — FIR No.: மு.த.அ. எண்: 03/AC/2023 — Date நாள்: 23.06.2023

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: 2018ன் திருத்தியமைக்கப்பட்டது. — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 01.06.2023 | 12.30 மணி
   Date to : நாள் வரை 20.06.2023 | 15.30 மணி
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை 22.06.2023 | 16.28 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம் 23.06.2023 | 07.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் 23.06.2023 | 07.45 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 75 கி.மீ தென்மேற்கே, தளி
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — ஊராட்சி ஒன்றிய அலுவலகம் தளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — J. உவைஸ் ரஹ்மான் கான்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — ஜிலான் கான்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 23 yrs
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — தொழிற்சாலை நிர்வாகம்
   (g) Address : முகவரி — 5/191-2, மசூதி ரோடு, காமராஜ் நகர் சின்ன எலசகிரி, ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. புட்டண்ணா, உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் தளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

———

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ———

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J. [signature] 23/6/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.06.2023, 08.15மணி.

Name: பெயர் R. அழகுவேல்
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் நிலைய [illegible] [illegible]
[illegible] உ.நீ.க.பிரிவு

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2023 சட்டப்பிரிவு 7(a) of the Previntion of Corruption Act,1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

---

23.06.2023-ம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், சின்னஎலசகிரி, காமராஜ் நகர், மசூதி தெரு, கதவு எண் 5/191-2-ல் குடியிருக்கும் ஜீலான்கான் என்பவரின் மகன் திரு.J.உவைஸ் ரஹ்மான் கான் என்பவர் நிலைய ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம்: 23.06.2023, அனுப்புநர், J.உவைஸ் ரஹ்மான் கான், த/பெ. ஜீலான்கான், 5/191-2, மசூதி தெரு, காமராஜ் நகர், சின்னஎலசகிரி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் மேலே சொன்ன விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிப்ளமோ படித்துள்ளேன். எனது தந்தை ஜீலான்கான் சுமார் 25 வருடங்களாக ஒசூரில் Jay.Kay. இன்ஜினியரிங் என்ற பெயரில் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் சிறிய தொழிற்சாலை நடத்தி வருகிறார். அவருக்கு உதவியாக நானும் தொழிற்சாலையை கவனித்து வருகிறேன். இந்த தொழிலை விரிவு படுத்த வேண்டி கடந்த 2018-ம் வருடம் தேன்கனிக்கோட்டை வட்டம், தளி உள்வட்டம், கொமாரனப்பள்ளி கிராமத்தில் சர்வே எண்.234/1D1 மற்றும் 234/1D2-ல் சுமார் 1 எக்கர் நிலத்தை வாங்கினார். அந்த நிலத்தில் தொழிற்சாலை கட்டுவதற்காக கட்டிட வரைபட அனுமதி வேண்டி HNTDA (Hosur New Town Development Authority) அலுவலகத்தை அணுகி விசாரித்த போது எங்கள் நிலத்திற்கு அணுகு சாலை சான்றிதழ் பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற விபரம் தெரியவந்தது. அதனால் நான் எனது தந்தை பெயரில் அணுகு சாலை சான்றிதழ் கோரி கடந்த 2019-ம் ஆண்டு தேன்கனிக்கோட்டை வட்டாட்சியரிடம் விண்ணப்பித்து சான்று பெற்றேன். அதன் பின்னர் கொரோனா தொற்று நோய் காரணமாக தொழில் சற்று நலிவடைந்ததால் புதிய தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை சில வருடம் தள்ளி வைத்து விட்டோம். தற்போது மீண்டும் கொமாரனப்பள்ளி கிராமத்திலுள்ள எங்கள் நிலத்தில் தொழிற்சாலை கட்டுவதற்காக கட்டிட வரைபட அனுமதி வேண்டி விண்ணப்பிக்க HNTDA அலுவலகத்தை அணுகி உரிய ஆவணங்களை காண்பித்து விசாரித்த போது தேன்கனிக்கோட்டை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட அணுகு சாலை சான்றில் சாலையின் அளவு குறிப்பிடப்படவில்லை என்றும் அதனால் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் சாலையின் அளவு குறிப்பிட்டு அணுகு சாலை

சான்றிதழ் பெற்று வருமாறு தெரிவித்தனர். அதற்காக எனது தந்தையின் பெயரில் 17.05.2023-ஆம் தேதி விண்ணப்பம் தயார் செய்து, எனது தந்தையுடன் தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கு பணிபுரியும் திரு.புட்டண்ணா என்பவரிடம் விண்ணப்பத்தை கொடுத்தோம். அவர் அதை வாங்கி படித்து பார்த்து விட்டு மறுநாள் வருமாறு சொன்னார். ஆனால் எனக்கும் எனது தந்தைக்கும் சொந்த வேலை இருந்த காரணத்தால் மறுநாள் செல்லமுடியவில்லை, பின்னர் 01.06.2023-ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு திரு.புட்டண்ணாவை தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரில் சென்று சந்தித்தோம். பிறகு அவர் எனது தந்தை கொடுத்த விண்ணப்பத்தை எடுத்து கொண்டு எங்களையும் அழைத்துக்கொண்டு BDO அறைக்கு சென்றார். BDO திரு.நாகரத்தினம் அவர்கள் அணுகு சாலை சான்றிதழ் வழங்கி விடுகிறேன் என்றும் மற்ற விசயங்களை புட்டண்ணா சொல்வார் என்று சொன்னார். பின்னர் உதவியாளர் புட்டண்ணா எங்களிடம் அணுகு சாலை சான்றிதழ் வழங்குவதற்கு ரூ.40,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் ஏதாவது குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டதற்கு ரூ.30,000/- கொடுத்துவிடுங்கள் என்று திரு.புட்டண்ணா அவர்கள் சொன்னார். பிறகு நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டோம். அதன்பிறகு தொழில் சம்மந்தமாக டெல்லிக்கு சென்றுவிட்டோம். பின்னர் 20.06.2023-ஆம் தேதி மதியம் சுமார் 3.30 மணிக்கு நான் மட்டும் தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சென்று மீண்டும் திரு.புட்டண்ணாவை பார்த்த போது அவர் நான் பலமுறை உன் அப்பாவுக்கு செல்போனில் தொடர்பு கொண்டேன் ஆனால் உன் அப்பா என்னுடைய அழைப்பை எடுக்கவில்லை என்று சொன்னார். அதற்கு நான் என் அப்பா வெளியூர் சென்றுள்ளதால் அவரால் வரமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நான்தான் அன்றே உன் அப்பாவிடம் யாராவது ஒருவர் வந்து பணத்தை கொடுத்துவிட்டு சான்றை வாங்கி கொள்ளும்படி சொன்னேனே என்று சொன்னார். அதற்கு நான் சரி எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் இப்போது சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு BDO மற்றும் அலுவலகத்திற்கு ரூ.25,000/- என்றும் எனக்கு மட்டும் தனியாக ரூ.5,000/- கொடுத்துவிடு என்று சொன்னார். நானும் சரி அணுகு சாலை சான்று தயாராகிவிட்டதா என்று கேட்டதற்கு BDO வேறுபணியாக சென்றுள்ளதாகவும் இரண்டு நாட்கள் கழித்து அவர் வந்தவுடன் அவரிடம் கையெழுத்து வாங்கி தானே அணுகு சாலை சான்றை கொண்டுவந்து தருவதாக சொல்லி எனது செல்போன் நம்பரை பெற்றுக்கொண்டார். பின்னர் 22.06.2023-ஆம் தேதி மாலை 4.26 மணிக்கு 90472 10901 என்ற எண்ணிலிருந்து

எனது செல்போன் 8144444705 எண்ணிற்கு ஒரு அழைப்பு வந்தது. அப்போது நான் கார் ஓட்டிக்கொண்டு இருந்ததால் காரை ஓரமாக நிறுத்திவிட்டு பேசுவதற்க்குள் அழைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது பிறகு 4.28 மணிக்கு நான் திரும்ப அந்த செல்போன் எண்ணிற்கு அழைத்த போது திரு.புட்டண்ணா பேசினார் மேலும் சான்று ரெடியாகிவிட்டது இப்போது வரமுடியுமா என்று கேட்டார். எனது அம்மாவை மருத்துவமனைக்கு கூட்டி செல்லவிருப்பதால் நாளை காலை அலுவலகம் வந்து சான்று வாங்கிகொள்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி என்று சொல்லி அழைப்பை துண்டித்துவிட்டார். மேலும் எனக்கு உதவியாளர் திரு.புட்டண்ணாவிடம் ரூ.30,000/- லஞ்சமாக கொடுத்து அணுகு சாலை சான்று வாங்க விருப்பமில்லை. எனவே, அணுகு சாலை சான்று கொடுப்பதற்கு என்னிடம் ரூ.30,000/- லஞ்சமாக கேட்ட உதவியாளர் திரு.புட்டண்ணா மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd\-xxxx J.உவைஸ் ரஹ்மான் கான், 23.06.2023.

Sir, Received the written complaint on 23.06.2023 at 07.00 hrs and further between 07.15 hrs and 07.45 hrs, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with his personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Krishnagiri V&AC, Cr.No.03/AC/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 (Central Act of 2018) was registered today 23.06.2023 at 07.45 hrs against the accused. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies are sent to the officers concerned.

23/06/2023

(R.VADIVEL)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Krishnagiri.